# இந்திய இணைய தள விடுதிகள் சங்கம்

"ஒவ்வொரு மாதமும் நிகழ்நிலைப்படுத்துங்கள்" நவம்பர், **2009**

**அன்பான நலம் விரும்பிகளுக்கு ,**

இந்திய இணைய தள விடுதிகள் சங்கத்தின் முதல் செய்தி மடலை வெளியிடுவதில் நாங்கள் பெருமிதம் கொள்வதோடு சமீபத்திய நடப்புகள் அனைத்தையும் தெரிவித்து சங்கத்தின் முன்னேறத்திற்கும் ஆதரவு அளித்து கொண்டிருக்கிறோம். நம் குடும்ப உறுப்பினர்களின் நலனை விரும்பும் நாங்கள் ஒரு வளர்ந்து வரும் குடும்பம். தற்சமயம், இந்தியாவில் உள்ள 1,80,000 இணையதள விடுதிகள் மற்றும் 50,000 பொது சேவை மையங்களின் குரலை நாங்கள் ஒலிக்கின்றோம். இதனுடன் நம் உறுப்பினர் தளமும் ஒவ்வொரு நாளும் வேகமாக வளர்ந்து வருகிறது.

நம்மைப் பற்றிய முக்கிய நடப்புகளையும் நிகழ்ச்சிகளையும் நீங்கள் அறிவதற்கான புது முயற்சியே இந்த செய்தி மடல். எங்களின் புது முயற்சிக்கு உங்களின் சீரிய பங்குடன் ஆதரவு மற்றும் ஆலோசனையையும் எதிர்நோக்கியுள்ளோம்.

வாழ்த்துகளுடன்,

**அம்ரிதா சௌத்ரி**

இயக்குநர், CCAOI

## CCAOI அதன் உறுப்பினர்களுக்கான இலவச சட்ட பிரிவை தொடங்கியுள்ளது

இந்திய இணைய தள விடுதிகள் சங்கம், (CCAOI) உறுப்பினர்களுக்கு இலவச சட்ட உதவியை வழங்குவதற்காக இலவச சட்ட ஆலோசனை பிரிவை தொடங்கி உள்ளது. தற்போது அனைத்து உறுப்பினர்களும் தங்கள் வர்த்தகத்தில் எதிர்கொள்ளும் சட்ட பிரச்னைகளுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை பெறலாம். இந்திய இணைய தள விடுதிகள் சங்கம் (CCAOI) ஏற்கெனவே சட்ட வல்லுனர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. எனினும், இந்த இலவச சட்ட ஆலோசனை பிரிவின் மூலம் உறுப்பினர்களும் இணைய தள சட்டங்களை பற்றிய அறிவை பெற முடியும்.

## CCAOI, சுதேச மொழிகளின் முன்னேற்றத்திற்கான புது முயற்சிகளை தொடங்கியுள்ளது

இணைய தளத்தில் இந்தியாவின் சுதேச மொழிகளை மேம்படுத்தும் வகையில், CDAC மற்றும் இந்திய அரசின் தகவல் தொழில் நுட்பத்துறைக்கு இஇவிச (CCAOI) ஆதரவு கரத்தை நீட்டியுள்ளது.

இணைய தள விடுதிகள், பொது சேவை மையங்கள் மற்றும் பொது பயன்பாட்டாளர்கள், இணைய தளத்தில் http://ccaoi.in/UI/links/FreeLanguageSoft.php என்ற எங்களின் தளத்தில் இலவசமாக 22 மொழிகளில் கொடுக்கப்பட்டு இருக்கும் சுதேச மொழிக்கான மென்பொருளை கீழிறக்கம் செய்து பயன்பெறலாம்.

## தற்போது, CCAOI, ஆசிய பசிபிக் இணையதள ஆராய்ச்சி நிறுவனத்தில் (APIRA) உறுப்பினர்

(CCAOI) இந்திய இணைய தள விடுதிகள் சங்கம் (இஇவிச), ஆசிய பசிபிக் இணையதள ஆராய்ச்சி நிறுவனத்தில்(ஆபிரா) (Asia Pacific Internet Research alliance) உறுப்பினராகி உள்ளதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிய பசிபிக் பகுதியில் இணையதள தகவல் மற்றும் ஆராய்ச்சியில் கருத்து பரிமாற்றத்தையும் ஒப்புமையையும் மேம்படுத்தும் நோக்கில் ஆபிரா தானாக உருவான இலாப நோக்கற்ற நிறுவனம். இப்பகுதியில், இந்தியாவின் இணைய தள பயன்பாடு தொடர்பான பிரச்னைகளை விவாதிக்கலாம். ஆபிரா மேற்கொள்ளும் ஆய்வுகளிலும், புள்ளியியல் அறிக்கை உருவாக்கத்திலும் இந்திய இணைய தள விடுதிகள் சங்கம் (இஇவிச) ஒரு சிறந்த பங்கினை ஆற்ற தயாராக உள்ளது.

## "பெங்களூார் இணையதள பாதுகாப்பு உச்சி மாநாடு-2009" பங்கேற்பாளர்கள் அதிகரிப்பு

பெங்களூரில் அக்டோபர் 2009, 8 & 9 தேதிகளில் கர்நாடக அரசின் தகவல் தொழில் நுட்பம், BT மற்றும் S&T துறையினரால் நடத்தப்பட்ட **"பெங்களூர் இணையதள பாதுகாப்பு உச்சி மாநாடு-2009"** இல் பெங்களூார் மற்றும் கர்நாடகாவை சேர்ந்த இணைய தள விடுதிகளின் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்ததில் **இஇவிச (CCAOI)** சிறந்த பங்கினை ஆற்றியுள்ளது. இம் மாநாட்டில் தரவு பாதுகாப்பு, IPR மேலாண்மை, இணையதள தீவிரவாதத்தை எதிர்த்தல், இணையதள தடயவியல், இணைய தளத்தில் பாதுகாப்பு மற்றும் தனிமனித உரிமை போன்ற பிரச்னைகள் பற்றி அலசப்பட்டது.

## இஇவிச(CCAOI), இணைய தள விடுதி/பொது சேவை மையங்களில் பின்பற்ற வேண்டிய சிறந்த வழிமுறைகளுக்கான கையேட்டினை வெளியிட்டுள்ளது

இந்திய இணைய தள விடுதிகளில் பின்பற்ற வேண்டிய சிறந்த வழிமுறைகளுக்கான கையேட்டின் அவசியம் நீண்ட நாள் தேவையாக உணரப்பட்டது. இப்பிரச்னைக்கு தீர்வு காணும் விதமாக இஇவிச (CCAOI) வழிகாட்டி கையேட்டினை உருவாக்கியுள்ளது. இக்கையேடு, விடுதி உரிமையாளர்களுக்கு சிறந்த வழிமுறைகளுக்கான பயிற்சியை அளித்து அவர்களின் வர்த்தகத்தை பெருக்குவதற்கு உதவிகரமாக இருக்கும். அத்துடன் இலாபகரமான வாடிக்கையாளர் உறவினை பெறுவதற்கான உத்திகளையும் அளிக்கும். இணையதளத்தில் இக்கையேடு, ஆங்கிலம், இந்தி, தமிழ் மற்றும் வங்காள மொழிகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இஇவிச(CCAOI), கிளியர்டிரிப்.காம் நிறுவனத்துடன் உடன்பாட்டினை ஏற்படுத்தி கொண்டுள்ளது

மக்கள் தங்கள் பயணங்களையும் விடுமுறைகளையும் திட்டமிடும் முறையை, கிளியர்டிரிப்.காம் உள்ளிட்ட பல இணைய தளத்துடன் இணைந்த பயண ஏற்பாட்டு முகமைகள் மாற்றி அமைத்துள்ளன. பயண மற்றும் சுற்றுலா துறையில் தனக்கென தனி இடத்தை பிடித்திருக்கும் கிளியர்டிரிப், உடன்நிகழ் பயண வலைவாசலில் ஒரு சிறந்த நிறுவனமாகும். இந்திய இணையதள விடுதிகள் சங்கம் கிளியர்டிரிப் நிறுவனத்துடன் இணைந்து அதன் உறுப்பினர்களுக்கு கூடுதல் முதலீடு இன்றி அதிக வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை வழங்க உள்ளது.

மாதமொரு முத்து

**"தொழில் முனைவோர் என்பவர் முக்கியமாக கற்பனை திறனுடன் செயல் திறனும் வாய்ந்தவர். அவரால் ஏதோ ஒன்றினை கற்பனை செய்ய முடியும். அவ்வாறு கற்பனை செய்யும்போது அதை எப்படி மெய்யாக்குவது என்பதையும் அவர் அறிவார்" - இராபர்ட் எல் ஷ்வார்ட்ஸ்**

## விரைவில் ஆரம்பம்

இந்திய மக்களின் நன்மைக்காக விரைவில் நாங்கள் அறிமுகப்படுத்த உள்ளோம் :

**பேச்சு ஆங்கிலத்திற்கான இலவச பயிற்சி**
**சுதேச மொழிக்கான சிறப்பு மென்பொருள் மற்றும் பல...**

பதிப்புரிமை © 2009 CCAOI –க்கு உரியது

**இந்திய இணைய தள விடுதிகள் சங்கம்**

C - 427B, சுஷந்த் லோக், Phase 1, குர்கான் – 122002. +91 124 4047508

இணைய தளத்தில் எங்களை நாட : www.ccaoi.in

கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் மின்னஞ்சல் முகவரி :info@ccaoi.in